# தேனி-பழனிச்செட்டிபட்டியில் கலைஞர் படிப்பகம் திறப்பு:

## முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!



தேனி, ஆக.9-

தேனி மாவட்டம், தேனி தி.மு.க. வடக்கு மாவட்டம், போடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழனி செட்டிபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் தலைவர் மிதுன்சக்ரவர்த்தி ஏற்பாட்டில் கலைஞர் படிப்பகம் பழனி செட்டிபட்டி பஸ் நிறுத்தம் அருகே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கலைஞர் படிப்பகம் திறப்பு விழா தேனி தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி., தலைமையில் நடைபெற்றது. பழனி செட்டிபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் மிதுன்சக்ரவர்த்தி முன்னிலை வகித்தார்.

விழாவில் தமிழக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கலைஞர் படிப்பகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இதனைத்தொடர்ந்து ஓ. பன்னீர்செல்வம், மற்றும் தங்கதமிழ்செல்வன் ஆகியோர் படிப்பகத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து புத்தகங்களை பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் ஆர்.டி.கணேசன், போடி லட்சுமணன், மாவட்ட துணைச்செயலாளர் திருக்கண்ணன், நகர செயலாளர்கள் சூர்யா பாலமுருகன், போடி புருஷோத்தமன், ஒன்றிய செயலாளர்கள் வீரபாண்டி ரத்தின சபாபதி, அய்யப்பன், பூதிப்புரம் பேரூராட்சி மன்ற தலைவர் கவியரசு, திமுக பிரமுகர்கள் முருகேசன், வீரபாண்டி சசி, அல்லிநகரம் முனியாண்டி உள்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### மதுரை – உத்தங்குடியில் இன்று – தி.மு.க. சட்டத்துறை சார்பில்!

# தென்மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

மதுரை, ஆக.9-

திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறை சார்பில் தென்மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் நாள் : 09.08.2026, ஞாயிற்றுக்கிழமை, இடம் JFA லக்கி பேலஸ், உத்தங்குடிமதுரை நேரம் : காலை 10.00மணி

வரவேற்புரை : மதுரை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.கோகுல்நாத், தலைமை :கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ முன்னாள் எம்.பி., சட்டத்துறை இணைச்செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் முன்னாள் எம்.எல்.ஏ. சட்டத்துறை இணைச்செயலாளர் S.ராதாகிருஷ்ணன் சட்டத்துறை இணைச்செயலாளர் S.ராஜா முகம்மது தலைமைக்கழக வழக்கறிஞர் A. கலாநிதி தலைமைக்கழக வழக்கறிஞர் S.S.மனோஜ்

சிறப்புரை:கழக துணைப் பொதுச்செயலாளர்,நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ. விருதுநகர் வடக்கு மாவட்ட செயலாளர் தங்கம்தென்னரசு நிகழ்ச்சியில் பங்கேற்போர்: கழக துணைப்பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர், ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., விருது நகர் தெற்கு மாவட்ட செயலாளர் K.K.S.S.R.ராமச்சந்திரன் MLA முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் அர.சக்கரபாணி M.L.A முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட செயலாளர் K.R.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திருமதி.பி.கீதா ஜீவன்,முன்னாள் அமைச்சர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் முன்னாள் அமைச்சர் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் P.மூர்த்தி முன்னாள் அமைச்சர் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர் T.மனோதங்கராஜ் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் T. தங்கதமிழ்செல்வன். மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் M.மணிமாறன் M.L.A.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் .I.P.செந்தில்குமார்.M.A.

இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர்பாட்சா(எ) முத்துராமலிங்கம்.L.

திருநெல்வேலி மத்திய மாவட்ட செயலாளர் மு.அப்துல்வஹாப்MLA| தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் இ.ராஜா BLA தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் N.ராமக்கிருஷ்ணன் B.M மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி ML,A கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் R.மகேஷ் திருநெல்வேலி 'கிழக்கு மாவட்ட செயலாளர் M.கிரஹாம்பெல் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் V.ஜெயபாலன்

நன்றியுரை : திருநெல்வேலி 'கிழக்கு மாவட்ட செயலாளர்

மதுரை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் J. S.சிவனேசன்.

---

### ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் – மஸ்கட் மாநகரில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## சிவ.செந்தில் தலைமை! கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்பு!

மஸ்கட் (ஓமன்) ஆக. 9-

மஸ்கட் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி சிவசெந்தில் தலைமையில் நடை பெற்றது.

மஸ்கட் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி சிவசெந்தில் தலைமையில் நடைபெறகிறது. சிவசெந்தில் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி மஸ்கட் மாநகரில் நடைபெற்றது. ஓமன் திமுக பொருளாளர் சிவ செந்தில் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர்கள் முகமது பாரூக், திரு மாவளவன், அயூப்கான், பாக்கியராஜ் மற்றும் நிர்வாக குழு சார்ந்த உறுப்பினர்கள் மாணிக்கவேல், ஐயப்பன், செர்லின், பிரகாஷ், தினேஷ், அப்ரின், அப்துல் சமது, சுந்தர் ராஜன்,தேவன், ஷேக், அப்துல், தனபால், சந்தோஷ் குமார், ராம்குமார்,அருள், மணிகண்டன், தயாநிதி, முகமது சபின், முகமது ஹுசைன், விஜிமான், ராஜன் ஜேம்ஸ், பிராங்கிளின், சகிலாஸ், நசீர், காதர் பாட்சா, காதர் மைதீன், முகமது சுபான், வைஸ்லீ , லூனஸ், பைசல் இஸ்மத், முருகன், சிராஜுதீன், அப்துல் காதர், பூமிநாதன் மற்றும் கழக மகளிர் அணியைச் சார்ந்த நிர்வாகிகள் ரேவதி, உமா மகேஸ்வரி, சைனி, கங்கா மற்றும் ஓமன் திமுக GENZ குரூப்ஸ் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அனைவரும் நம் சமூக நீதியின் சூரியன் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அரை நூற்றாண்டு சாதனைகளை வரலாற்றுச் செய்திகளோடு குறிப்பிடப்பட்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் ஒவ்வொரு குடும்பமும் பெற்ற நன்மைகளும், கலைஞர் அவர்கள் ரத்து செய்த நுழைவுத் தேர்வுகளைப் பற்றியும், அடிப்படை கல்வி முதல் கல்லூரி கல்வி வரை அவர் நம் தமிழ் சமூகத்திற்கு செய்த எண்ணற்ற நன்மைகளும் குறிப்பாக பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர் கொண்டு வந்த சீர்திருத்தங்களும் என அனைத்து தகவல் களஞ்சியங்களும் அனைவருக்கும் அறியும் வண்ணம் இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

கலைஞரின் நினை வேந்தல் நிகழ்ச்சியாக தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சி இறுதியில் அனைவரின் மனதிலும் " கலைஞர் ஓர் சகாப்தம்" என்ற எண்ணங்களோடு நிறைவடைந்தது.

வாழ்க வாழ்க வாழ்கவே கலைஞர் புகழ் வாழ்கவே! என்று விண்ணை முட்டும் அளவிற்கு கோஷமிட்டவாறு மீண்டும் கழக ஆட்சியினைக் கொண்டு வர வேண்டும் என்று உறுதிமொழி ஏற்போடு நிகழ்ச்சி நிறைவுற்றது..

---

### தர்மபுரி கிழக்கு,மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அஞ்சலி நிகழ்ச்சி!

## கழகத்தினர் பங்கேற்பு!

தர்மபுரி, ஆக.9-

தர்மபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கருணாநிதி நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி அவரது உருவப்படத்திற்கு கட்சி நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

**கிழக்கு மாவட்ட தி.மு.க.**

தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 8ம் ஆண்டு நினைவு நாள் தர்மபுரி நகரில் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி தர்மபுரி ராஜகோபால் கவுண்டர் பூங்கா அருகில் இருந்து நகர செயலாளர்கள் நாட்டான் மாது, எம்.பி.கௌதம் ஆகியோர் தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக 4 ரோட்டில் உள்ள அண்ணா சிலை முன்பு முடிவடைந்தது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கருணாநிதி உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம் சுப்ரமணி, தர்மசெல்வன், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட பொருளாளர் தங்கமணி, மாவட்ட துணை செயலாளர் ஆறுமுகம்,மாவட்ட ஒன்றிய செயலாளர்கள், ஏ.எஸ். சண்முகம்,காவேரி, என்.பி.பெரியண்ணன், வைகுந்தம், பச்சையப்பன்,நகர நிர்வாகிகள் முல்லைவேந்தன், சுருளிராஜன், அழகுவேல், அன்பழகன், கோமளவல்லி ரவி, சம்பந்தம் சார்பு அணி அமைப்பாளர்கள் பொன் மகேஸ்வரன், விஜியன், முத்துலட்சுமி, குமார், ராஜா, ரவி,

ரஹீம்,உஷா ராஜேந்திரன், தேவராஜ், இளைஞரணி துணை அமைப்பாளர் அசோக்குமார்,முன்னாள் ஒன்றிய செயலாளர் எச்சனஹள்ளி சண்முகம், முன்னாள் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மே.அன்பழகன்,மற்றும் ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மேற்கு மாவட்ட தி.மு.க.**

இதேபோன்று தர்மபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி நினைவு நாள் பாப்பிரெட்டிபட்டியில் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் உருவப்படத்திற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. பழனியப்பன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத் தலைவர் மனோகரன், மாநில வர்த்தகரணி துணைச் செயலாளர் மெடிக்கல் சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்தார்த்தன், ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், நெப்போலியன், கே. பி. சக்திவேல், மாது, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சிவகுரு, பேரூராட்சி செயலாளர் ஜெயச்சந்திரன்,பேரூராட்சி தலைவர் மாரி, ஆசிரியர் இராசு தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---





கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி நாளையொட்டி அமைதி பேரணி நடைபெற்றது, தொடர்ந்து ஏழை எளிய பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் வழங்கினார், இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் புகழை போற்றி வணங்கினார்கள்.

---

### வெளிநாடுகளில் மருத்துவம் படித்த இந்திய மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் வகையில்

# எப்.எம்.ஜி.இ. தேர்வு முறை மாற்றத்திற்கு ஒன்றிய அரசு உடனடியாக தலையிட வேண்டும்!

## சுகாதாரத்துறை அமைச்சர் நட்டாவை நேரில் சந்தித்து – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை!

புதுடெல்லி, ஆக.9-

வெளிநாடுகளில் மருத்துவம் படித்த இந்திய மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் வகையில் FMGE தேர்வு முறை உள்ளது. இவற்றைத் தடுக்க ஒன்றிய அரசு உடனடியாக தலையிட வேண்டுமென சுகாதாரத் துறை அமைச்சர் நட்டாவை நேரில் சந்தித்து தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.



சென்னை தெற்கு மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், வெளிநாடுகளில் மருத்துவம் படித்த இந்திய மாணவர்கள் எழுதும் Foreign Medical Graduate Examination (FMGE) தேர்வில் திடீரென செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தை டெல்லியில் ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவை நேரில் சந்தித்து வழங்கினார்

அந்த சந்திப்பின் போது, அடிப்படை மருத்துவத் தகுதியை மதிப்பிடும் உரிமத் தேர்வாக இருக்க வேண்டிய FMGE, தற்போது NEET PG மற்றும் INICET போன்ற முதுநிலை நுழைவுத் தேர்வுகளுக்கு இணையான கடினத் தன்மையுடன் நடத்தப்பட்டுள்ளது. இதனால், வெளிநாடுகளில் மருத்துவம் பயின்ற இந்திய மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், முன்கூட்டிய அறிவிப்பின்றி தேர்வு முறை மாற்றப்பட்டதாகவும், நீளமான Casebased Clinical Questions, Xray, CT Scan உள்ளிட்ட பட அடிப்படையிலான கேள்விகள் மற்றும் புதிய வினாத்தாள் அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் ஒன்றிய அமைச்சரிடம்சுட்டிக்காட்டியுள்ளார். புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டம் அல்லது தேர்வு வரைமுறை எதுவும் வெளியிடப்படாத நிலையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

சமீபத்திய FMGE தேர்வில் தேர்ச்சி விகிதம் வெறும் 12 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும், தேர்வு எழுதிய சுமார் 36,000 பேரில் 32,000 பேர் தோல்வியடைந்துள்ளதாகவும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி குறிப்பிட்டுள்ளார். போட்டித் தேர்வாக இல்லாத உரிமத் தேர்வில் 88 சதவீத தோல்வி விகிதம் இருப்பது, தற்போதைய மதிப்பீட்டு முறை அடிப்படையிலேயே தவறானது என்பதை காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், தேர்வுக்கு 6,000 முதல் 7,000 வரை கட்டணம் வசூலித்தும், அதிகாரப்பூர்வ Answer Key, Response Sheet ஆகியவை வெளியிடப்படவில்லை என்றும், Re checking அல்லது Reevaluation செய்யவும் வாய்ப்பு வழங்கப்படவில்லை

எனவே,

(1) அதிகாரப்பூர்வ விடைக்குறிப்பை கட்டாயமாக வெளியிட வேண்டும்,

(2)மாணவர்களின் புகார்களை விசாரிக்க தனித்துவமான Grievance Mechanism அமைக்க வேண்டும்,

(3) தேர்வு முறையில் மாற்றங்கள் செய்யப்படுமானால், குறைந்தது ஒரு வருடத்திற்கு முன்பே அறிவிக்க வேண்டும்,

(4) அதற்கேற்ற மாதிரி வினாத்தாள்களையும் வெளியிட வேண்டும்,


என ஒன்றிய அமைச்சரிடம் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில், வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளின் எதிர்காலத்தை பாதுகாக்க ஒன்றிய அரசு உதவியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் மு. நடராசன்
### ஆகஸ்ட் 9 (2003)



கழகம் தொடங்கியபோதே, உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், இரயில்வே துறையில் பணியாற்றியபோது, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற காரணத்தால், தனது ரயில்வே பணியை இழந்து, முழுநேர கழக பணியாற்ற தொடங்கியவர்.

1960ஆம் ஆண்டு அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர் ஆகிய ஒருங்கிணைந்த தாலுக்கா உள்ளடக்கிய திருச்சி தாலுக்கா வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

திருச்சி மாவட்ட பஞ்சாயத்து கோர்ட் தலைவராகவும் – திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனை ஆர்.எல்.யுனியன் நிவாகியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1953ல் நடைபெற்ற கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம் – 1957ல் நடைபெற்ற நங்கவரம் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "கழகத்தின் மூத்த தொண்டர்களில் ஒருவரும் – அண்ணா திருச்சிக்கு வரும்போதெல்லாம் அவருக்கு தொண்டாற்றியவர்களில் ஒருவரும் – அன்பிலார் மாவட்டச் செயலாளராக பணியாற்றிய காலத்திலே, மாவட்டக் கழகத்திலேயே தங்கி, அல்லும் பகலும் பணியாற்றியவர்" என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**